**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

Calendar Case No: DVC. 13/2024

DEPOSITION OF WITNESS for Prosecution ம.சா.1

Name : திருமதி. கௌசல்யா

Father Name : திரு. அருண்ராஜ்

Village : சித்தளி

Taluk : குன்னம்

Age : 26 / 2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்படுகிறது.**

**எதிர்தரப்பினரின் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., (Physics), Steno Junior Course முடித்துவிட்டு தற்போது Steno Senior Course படித்து கொண்டிருக்கிறேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வேலை எதுவும் பார்க்கவில்லை படித்துக் கொண்டு தான் இருக்கிறேன். நானும் எதிர்மனுதாரர்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிர் மனுதாரர்களின் வீடும் எனது பெற்றோர் வீடும் நடந்து சென்றால் 5 நிமிடம் தூரம் இருக்கும் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக எதிர்மனுதாரர்களின் குடும்பத்துடன் எங்களுக்கு பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பாக எனக்கும் 1ம் எதிர்மனுதாரர் அருண்ராஜீக்கும் எவ்வித குடும்ப பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான், இதனால் வரை இல்லை. திருமணத்திற்கு பிறகு நான்

எதிர்மனுதாரர்கள் வீட்டில் தான் நான் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். அவர்களுடன் வாழும்போது எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் ஆரம்பத்தில் எவ்வித பிரச்சனை இல்லை இடையில் தான் பிரச்சனை ஆனது. எந்த மருத்துவமனையில் எனக்கு குழந்தை பிறந்தது என்றால் பாலக்கரையில் உள்ள இராமசாமி மருத்துவமனையில் பிறந்தது. குழந்தை பிறக்கும்போது ஆரோக்கியமாக இருந்தது. குழந்தை பிறந்து ஒரு ஆண்டு வரை எனக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் அருண்ராஜ் வீட்டு செலவிற்காக எனக்கு அக்கவுண்ட்டில் பணம் போடுவார் என்றால் சரிதான். எனது பெற்றோர் வீடும் எதிர்மனுதாரர்களின் வீட்டில் அருகில் இருப்பதால் 1ம் எதிர்மனுதாரர் என்னை அடிக்கடி எனது பெற்றோர் வீட்டில் விட்டு விட்டு அவர் வேலைக்கு சென்று விடுவார். 1ம் எதிரி வேலை முடித்துவிட்டு வரும்வரை நான் எனது பெற்றோர் வீட்டில் இருப்பேன் என்றால் சரிதான். குழந்தையையும் அழைத்துக் கொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு செல்வேன் என்றால் சரிதான். நான் ஆரோக்கியமில்லாத உணவுகளை கொடுத்து தான் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது என்று 1ம் எதிர்மனுதாரர் அருண்ராஜ் சொல்கிறார் என்றால் சரியல்ல. குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாத போது எந்த மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் திருச்சியில் உள்ள சூர்யா மருத்துவமனையில் சேர்த்தேன். அப்போது மருத்துவ செலவுகள் எல்லாம் 1ம் எதிர்மனுதாரர் அருண்ராஜ் என்பவர் பார்த்தார் என்றால் சரியல்ல நான் தான் பார்த்தேன். நான் மேற்கண்ட செலவுகளை பார்த்தேன் என்று எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குழந்தை இறந்து தற்போது இரண்டரை வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். குழந்தை இறந்ததற்கு பின்பு ஒரு மாதம் மட்டும் தான் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தேன். பிறகு தான் பிரச்சனை வந்தது. அதிலிருந்து தான் நான் தனியாக இருக்கிறேன். எனது முதன்மை வாக்குமூலத்தில் 2ம் எதிர்மனுதாரர் என்னிடம் தவறாக நடக்க முயற்சி செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அது சம்மந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வேறு பெண்ணிடம் தொடர்பு வைத்து வருகிறார் என்று எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 3ம் எதிர்மனுதாரர் வரதட்சனை கேட்டதாக எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் 2ம்எதிர் மனுதாரருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அது தகுந்த முகாந்திரம் இருந்திருந்தால் போலிசார் நடவடிக்கை 2ம் எதிர்மனுதாரரின் மீது எடுத்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த புகார் பொய் என்பதால் தான் அதன் மீது மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எங்கு எப்போது எனக்கு எதிராக என்ன மாதிரியான கொடுமைகள் செய்தார்கள் என்று குறிப்பிட்டு முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எவ்வித சங்கதிகளும் எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர்கள் என்னை அடித்து நான் பெரம்பலூர் தலைமை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்று எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர்கள் நான் தான் அடித்தேன் என்றாலும் 2ம் எதிர்மனுதாரரின் கழுத்திலிருந்த செயினை பிடித்து அறுத்து விட்டேன் என்றாலும் சரியல்ல. எனது நாத்தனாரின் கணவர் சுரேஷ்குமார் மற்றும் மாமியாரின் அக்கா மகன் கண்ணுசாமி ஆகிய இருவரின் பெயர்களையும் எதிர்மனுதாரர்களாக சேர்த்து தான் குடும்ப வன்முறை வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட இருவரின் மீதும் முதல்

தோற்ற வழக்கு இல்லை என்பதால் அவர்களின் பெயர்களை சேர்த்து இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கவில்லை என்றால் தெரியவில்லை. மொத்த குடும்பத்தையும் பழி வாங்க வேண்டும் என்பதால் தான் அனைவரின் பெயரையும் சேர்த்து இவ்வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லை என்றால் சரியல்ல சேர்ந்து வாழத்தான் ஆசைப்படுகிறேன். கடந்த இரண்டரை வருடமாக 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன் என்று நீதிமன்றத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுப்பற்றி விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்பதால் தாக்கல் செய்யவில்லை. உண்மையிலேயே சேர்ந்து வாழ ஆசைப்பட்டிருந்தால் சேர்ந்து வாழ மனு ஏதேனும் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் எதிர்மனுதாரர்களை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் தான் 1ம் எதிர்மனுதாரருக்கு விவாகரத்து தராமலும் அவருடன் சேர்ந்து வாழாமலும் இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரர்களுடன் 80 இலட்சம் பணம் மற்றும் சொத்துக் கேட்டு மிரட்டுவதாக எதிர்மனுதாரர்கள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு கேட்டதற்கான போன் ஆடியோக்கள் எதிர்மனுதாரர்களுடன் உள்ளது என்றால் அது என்னுடையது இருக்காது. வெள்ளைத்தாளில் சீர்வரிசைப்பட்டியல் எழுதியிருப்பது யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் தயார் செய்யமுடியும் என்றால் சரியல்ல எனக்கு போட்டதை நான் தான் எழுதிக் கொடுத்தேன். எதிர்மனுதாரர்களுக்கு சொத்து உள்ளதாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 1ம் எதிர்மனுதாரரின் பெயர் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான் அவரின் பெற்றோர் பெயரில் தான் சொத்து உள்ளது. சமூக நலத்துறையில் மனு கொடுத்த பின்பு அவர்கள் என்னை விசாரணை செய்து என்னிடம் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அப்போது நான் எழுதிக் கொடுத்ததிற்கும் என்னுடைய முதன்மை வாக்குமூலத்திற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நானும் 1ம் எதிர்மனுதாரரும் தனிக்குடும்ப

அட்டை வைத்திருக்கிறோம் என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டையில் குடும்ப தலைவியாக என்னுடைய பெயரும் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பெயரும் எனது மகள் ஆலினி பெயரும் உள்ளது. அந்த அட்டையை தற்போது வரை நான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் அரசாங்கம் வழங்கும் மகளிர் உரிமை தொகையான ரூபாய் ஆயிரம் பெற்று வருகிறேன் என்றால் ஓராண்டு வரை வாங்கினேன் தற்போது எனது கணவர் அரசாங்க வேலை செய்து வருவதால் அது கேன்சல் ஆகிவிட்டது. தற்போது எனது குடும்ப அட்டையில் 1ம் எதிர்மனுதாரரின் பெயரை நீக்கிவிட்டேன் என்றால் பொய். அவ்வாறு நீக்கவில்லை என்பதற்காக ஆதரமாக குடும்ப அட்டையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். குடும்ப அட்டையை தாக்கல் செய்ய மனுதாரர் கால அவகாசம் கோருவதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.